
### சாலை விபத்து: இதுவரை 9 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.90 இலட்சம் வழங்கல்!

# திருநெல்வேலி பி.மேகலிங்கம் குடும்பத்திற்கு ரூ.10 இலட்சம் நிவாரண நிதி!

## தி.மு.க. சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ. 5-**

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த திருநெல்வேலி மேற்கு மாவட்டம் பி.மேகலிங்கம் குடும்பத்திற்கு தி.மு.க. சார்பில் ரூ. 10 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார்.இதுவரை 9 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.**



மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், "கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்." என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ்ச்செல்வன் ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் திருவாரூர் மாவட்டத்தைச் எம்.விக்னேஷ் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.ராம்பிரசாத் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரண்ராஜ் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாசம் ஆகிய 8 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து;

திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான பி.மேகலிங்கம் அவர்கள், கேரள மாநிலம், கோனி சென்ட்ரல் ஜங்ஷன் பகுதியில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது வாகன விபத்தில் சிக்கி உயிரிழுந்த மேற்சொன்ன பி.மேகலிங்கம் குடும்ப நிவாரண நிதியாக,

ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை, தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.மேகலிங்கம் அவர்களின் மனைவி திருமதி எம்.செல்வி அவர்களிடம் நேற்று (04.11.2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

---

### என்.கௌதமன் தலைமை! 'என் வாக்குச் சாவடி - வெற்றி வாக்குச் சாவடி' -

## வாக்குச் சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை!

*நாகை, நவ. 5 -*

நாகை மாவட்ட திமுக சார்பில் என் வாக்கு சாவடி வெற்றி சாவடி என முன் நிறுத்தி வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ. 2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (பி.டி.ஏ.) ஆலோசனைக் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சர் உமதிவாணன், தொகுதி பார்வையாளர்கள் நாகை தொகுதி ஆர்.அருள்செல்வம், கீழ்வே ளூர் தொகுதி இரா.சங்கர், வேதாரண்யம் தொகுதி வி.ஜெயபிரகாஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப. கோவிந்தராசன், க.இராஜேந்திரன், இல.மேக நாதன், மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம், பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச் சந்திரன், ஆரூர்.மணிவண்ணன், கற்பகம்நீலமேகம் ஆகியோர் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், மண்டல பொறுப்பாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என்.நேரு சிறப்புரை யாற்றினார். கூட்டத்தில் மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், கே.பழனியப்பன், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், சோ.பா.மலர்வண்ணன், உதயம் வே.முருகையன், என்.சதாசிவம், நகரக் கழகச் செயலாளர்கள் மா. மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், சி. சுப்பிரமணியன், முகமதுசுல்தான், பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ். பி.டி.சார்லஸ், இல.பழனியப்பன், கே.பாண்டியன், எல்.எஸ்.ஈ.பழனியப்பன், எஸ்.பன்னீர்செல்வம், உமாசெந்தாமரைசெல்வன், கோ.சிவக்குமார் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, ப.உயக்குமார், இரா.முருகையன், ஆர்.துரைராஜ், அ.பாரிபாலன் கேஸ் வி.செந்தில், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, , பி.முருகானந்தம், கே.எஸ். சாகுல்ஹமீது. எஸ்.பால் ராஜ், ஆர்.ஆர்.குலோத்துங்கன், க.சத்தியமூர்த்தி, த.தமயந்தி, எஸ்.புவனேஷ்வரி, எஸ்.சந்தோஷ், இளம். சுந்தர், எஸ்.சுரேந்தர், வி. கமல், எஸ்.வெற்றிச்செல்வன், எஸ்.பாலமுரளி மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்ஏ. 2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (பி. டி.ஏ.) கலந்து கொண்டனர். முடிவில் நாகை நகரச் கழகச் செயலாளரும், நகர் மன்ற தலைவருமான இரா. மாரிமுத்து நன்றி கூறினார்.

---

### சிவகங்கை மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் வே.ரூசோவின் 27வது ஆண்டு நினைவு நாள் !

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் அமைதிப் பேரணி!

*சிவகங்கை, நவ.5 -*

சிவகங்கை மாவட்ட முன்னாள் கழக இளைஞரணி அமைப்பாளர் வே.ருசோவின் 27 வது ஆண்டு அமைதி பேரணி அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் 8ம்தேதி தேவகோட்டையில் நடைபெறுகிறது.

இது குறித்து சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

சிவகங்கை மாவட்ட கழக முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளரும் முன்னாள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணை தலைவருமாக இருந்தவர் வே.ருசோ. இவர் 27 ஆண்டுக்கு முன்பாக 8.11.1998ம் ஆண்டு தேவகோட்டையில் மரணமடைந்தார் . அவரது நினைவினை போற்றும் வகையில் ஆண்டுதோறும் மாவட்ட கழகம் மற்றும் ருசோவின் குடும்பத்தினர் சார்பில் அமைதிப்பேரணி நடைபெற்று அவரது நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு 27வது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு வருகிற 8ம். தேதி வெள்ளிக்கிழமை காலை 9.00மணிக்கு தேவகோட்டை தியாகிகள் பூங்காவில் இருந்து எனது தலைமையில் கே.ஆர்.பெரியகருப்பன் அமைதிப் பேரணி நடைபெறுகின்றது.

இந்த அமைதிப் பேரணியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாநில அணி நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் .

இவ்வாறு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### தென்காசி சட்டமன்றத் தொகுதி

## பாக முகவர்கள் பயிற்சிக் கூட்டம்!

### ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது!

தென்காசி,நவ.5–

தென்காசியில் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தென்காசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட (BLA2)பாக முகவர்கள் மற்றும் (BDA) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் ஆகியோர்களுக்கான பயிற்சிக் கூட்டம்.

தென்காசி ஜெகநாத் அரங்கில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் தென்காசி தொகுதி பார்வையாளர் கலைக்கதிரவன் முன்னிலையில் நடைபெற்றது. தென்காசி நகரச் செயலாளர் சாதிர் வரவேற்றார்.

இந்நிகழ்வில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் ரவிச்சந்திரன், துணைச் செயலாளர் ராஜா முகமது ஆகியோர் பங்கேற்று பாக முகவர்களுக்கு பயிற்சி அளித்தனர். கூட்டத்தில் பங்கேற்ற ஒன்றிய,நகர, பேரூர் செயலாளர்களுக்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் கைக்கணினி வழங்கினார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேசுராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் இராஜேஸ்வரன், அருள், ஒன்றியச் செயலாளர்கள் அன்பழகன், அழகுசுந்தரம், ரமேஷ், சீனித்துரை, சேக்முகமது, ஜெயா, சுரண்டை நகரச் செயலாளர் கணேசன், பேரூர் செயலாளர்கள் மேலகரம் சுடலை, குற்றாலம் குட்டி, இலஞ்சி முத்தையா, பண்டாரம், மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, தங்கராஜ் பாண்டியன், அழகுதமிழ் சங்கர் தங்கப்பாண்டியன், தென்காசி நகர நிர்வாகிகள் பால்ராஜ், ராம்துரை, ஷேக்பரீத், மைதீன் பிச்சை, மைதீன், சன் ராஜா, சபரி சங்கர், சங்கர் ராஜன், ராமராஜ், மோகன்ராஜ், இசக்கி ரவி உட்பட பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பின் கீழ் வாக்காளர் திருத்தப்பட்டியலை விரைவாக மேற்கொள்ளவும், அதில் உள்ள குறைபாடுகளை எப்படி சரி செய்வது உள்ளிட்டவை குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

---

## தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

கழக சட்ட திட்ட விதி: 17 பிரிவு : 3ன்படி

முனைவர் **க.பொன்முடி**, எம்.எல்.ஏ.,

மாண்புமிகு **மு.பெ.சாமிநாதன்** ஆகியோர்

**தி.மு.க. துணைப் பொது செயலாளர்களாக** நியமிக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள்: 04.11.2025

**மு.க.ஸ்டாலின்**
தலைவர்
தி.மு.க.

---

## வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு ஆகிய மாவட்டங்களில் அடங்கியுள்ள சட்டமன்றத் தொகுதிகள் - மாவட்டப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் வேலூர் மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகள் மாற்றியமைக்கப்பட்டு, வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு ஆகிய இரண்டு மாவட்டக் கழகங்களாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மாவட்டப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

| மாவட்டம் | மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகள் | பொறுப்பாளர் |
|---|---|---|
| வேலூர் தெற்கு | வேலூர்<br>அணைக்கட்டு<br>குடியாத்தம் | திரு. ஏ.பி.நந்தகுமார், எம்.எல்.ஏ., |
| வேலூர் வடக்கு | காட்பாடி<br>கீழ்வைத்தியணான்<br>குப்பம் | திரு. டி.எம்.கதிர்ஆனந்த், எம்.பி., |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள்: 04.11.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---



மதுரை மாவட்டம் உசிலம்பட்டி நகராட்சி வார்டு 12ல் ரூபாய் 6.36 கோடி மதிப்பீட்டில் பி.கே. மூக்கையா தேவர் அவர்களுக்கு சிலையுடன் கூடிய அரங்கம் கட்டும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்று பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்விற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், தங்கதமிழ்செல்வன் எம்.பி., மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், பூமிநாதன் எம்.எல்.ஏ., பி.அய்யப்பன் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் எஸ்.ஓ.ஆர்.தங்கப்பாண்டியன், கே.ஐ.மகிழன், சுதாகரன், பழனி, அஜித்பாண்டி, முருகன், சரவணன், ஜெயச்சந்திரன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி திட்டக்குடி நகராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் அரசு அலுவலர்கள் மற்றும் திட்டக்குடி நகர கழக செயலாளர் வி.பி.பி.பரமகுரு மங்களூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பட்டூர் வீர. அமிர்தலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.